முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) கொளத்தூரில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் இராஜா தோட்டம் திட்டப்பகுதியில் 27.71 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 162 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ப்ரியா ரவிச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் 7.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் அடிச்சுவட்டில்

முதல்வர் மு.க.ஸ்டாலின் 'திராவிட மாடல்' ஆட்சியை நடத்தி வருகிறார்!

புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேச்சு!

புதுடெல்லி, ஆக. 26- பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் அடிச்சுவட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'திராவிட மாடல்' ஆட்சியை நடத்தி வருகிறார் என்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் பேசியபோது தமிழ்நாடு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி குறிப்பிட்டார்.

புதுதில்லியில் 24.08.2025, 25.08.2025 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாநாட்டில் இந்தியாவின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகராக விட்டல்பாய் படேல் பொறுப்பேற்றதன் நூற்றாண்டு விழா" நிகழ்ச்சியில் "இந்தியா மக்களாட்சியின் தாயகம்" என்ற தலைப்பில் "தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தின் துணை சபாநாயகர் கே.பிச்சாண்டி எம்.ஏ. ஆற்றிய உரை வருமாறு:-

இந்த இனிய மாலை பொழுதில் இந்த நூற்றாண்டு விழாவில் பங்கேற்கவும், உங்கள் அனைவரையும் சந்திக்கவும் நல்வாய்ப்பு நல்கிய நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, முதலில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்தியாவில் முதல் சபாநாயகராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட விட்டல்பாய் படேல் பொறுப்பேற்றதன் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில்" பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன், மேலும் நாட்டின் சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் நிலைநாட்ட அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு தமிழ்நாடு மாநிலத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விட்டல்பாய் படேல் முக்கிய இந்திய அரசியல் மேதையாகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும் திகழ்ந்தார் என்பதுடன், அவர் சர்தார் வல்லபாய் படேலின் மூத்த சகோதரரும் ஆவார் என்பதையும் நான் நன்கு அறிவேன். இந்தியாவின் சட்டமன்ற வரலாற்றில் முன்னோடியாகவும், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் செல்வாக்கு மிக்க நபராகவும் இருந்த அவர், நாட்டின் அரசியல் அமைப்பை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றிய தனிச்சிறப்பு மிக்க தலைவராக தனித்து நிற்கிறார். அவரது வாழ்க்கை, ஆங்கிலேய காலனித்துவ ஆட்சிக்கு எதிரான இந்தியாவின் சுதந்திரப் போராட்ட மாகாவியத்துடன் இரண்டறக்கலந்ததாகும்.

இப்போது, நம்முடைய கருத்துகளை ஒன்றாக விவாதிக்க உதவிய "இந்தியா மக்களாட்சியின் தாயகம்" என்ற தலைப்புக்குச் செல்ல விரும்புகிறேன்.

ஆபிரகாம் லிங்கன் "மக்களால், மக்களுக்காக நடத்தப்படுவதே மக்களாட்சி" என்று தன்னகத்தே துல்லியமாக பொருள்பொதிந்த வரையறையை முன்வைக்கிறார்.

"எனது அரசு சிறுபான்மையினருக்கானது" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர்!

மக்களாட்சி என்பது அனைத்து மக்களின் சார்பாக, அவர்களின் "விருப்பத்திற்கு" ஏற்ப செயல்படும் ஓர் அரசு ஆகும். இது அரசியலில் வெறும் எண் விளையாட்டு அல்ல.

சரியாக புரிந்துகொள்ளப்பட்டால், மக்களாட்சி என்பது பெரும்பான்மையினரின் ஆட்சி என்று கூட இருக்கக்கூடாது. ஏனெனில் அது சிறுபான்மையினரின் நலன்களை முற்றிலும் புறக்கணிப்பதாகும்.

எமது கட்சியின் தலைவரான தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர் "எனது அரசு சிறுபான்மையினருக்கானது" என்பார்.

மக்களாட்சியில், மக்களின் பங்கேற்பு மிகவும் முக்கியமானதாகும். வாக்களிப்பது அல்லது பதவிக்குப் போட்டியிட்டு மக்களின் பிரதிநிதியாக மாறுவது போன்றவை மக்களாட்சி முறையில் அரசில் பங்கேற்பதற்கான நன்கறியப்பட்ட வழிகளாகும்.

இந்தியா உலகின் மிகப் பெரிய மக்களாட்சி நாடாக பரவலாகக் கருதப்படுகிறது, மக்களாட்சி தாயகமாக அறியப்படுகிறது. இவ்வாறு அழைக்கப்படுவதற்கு முக்கிய காரணம், அதன் அதிக மக்கள் தொகையும், அதன் நிறுவப்பெற்ற மக்களாட்சி அமைப்புமுறையும் ஆகும். மக்களாட்சியின் தாயகமாக திகழும் இந்தியாவிற்கு, தமிழ்நாட்டின் பங்களிப்பு அளவற்றதாக உள்ளது.

நமது தேர்தல் அமைப்பு முறையின் முன்னோடி!

10 ஆம் நூற்றாண்டு சோழர்கள் காலத்தில் பின்பற்றப்பட்ட தொன்மையான தேர்தல் முறை ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உத்திரமேரூர் கல்வெட்டுகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளவாறு, கிராம நிருவாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இந்த ஏற்பாட்டுமுறை பயன்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாட்டு முறையில் கிராமங்கள் வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய பனை ஓலைகள் ஒரு பானைக்குள் வைக்கப்பட்டு, சிறுவன் ஒருவன் ஓலைச் சீட்டுகளைத் தெரிவு செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை அறிவிக்கும் தனித்துவமான முறை ஒன்றின் வாயிலாக மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர், இந்த ஏற்பாட்டுமுறை, நமது தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நமது தேர்தல் அமைப்பு முறையின் முன்னோடியாகக் கருதப்படுகிறது.

1921 ஆம் ஆண்டிலேயே, ஆங்கிலேயர்கள் ஆட்சிபுரிந்த இந்தியாவில், பெண்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமையை வழங்கும் தீர்மானத்தை கணிசமான பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய முதல் சட்டமன்றம் மதராஸ் மாகாணம் என்பதை நான் பெருமையுடன் கூறுகிறேன்.

மக்களாட்சியும் திராவிட அரசும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க) நிறுவனர் கா. ந. அண்ணாதுரை அவர்கள் மக்களாட்சியின் தீவிர ஆதரவாளர். மக்களாட்சியை மக்களின் நலன், முன்னேற்றம், சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கான மிகவும் பயனுள்ள அமைப்பாகவும் கருதினார். மக்கள் தேர்தல்கள் வாயிலாக தங்கள் தலைவர்களையும் கொள்கைகளையும் தேர்ந்தெடுக்கும் அவர்தம் சக்தி மற்றும் உரிமையின்பால் அவர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். தொடக்கத்தில், தனி திராவிட நாடு என்ற கோரிக்கையை கொண்டவராக இருந்த போதிலும், தேர்தல்கள் மற்றும் அரசியல் பங்கேற்பு வாயிலாக மக்களின் நம்பிக்கையை வெல்வது குறித்த முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற இந்திய அரசமைப்பின் இந்திய கட்டமைப்பிற்குள் உள்ள மக்களாட்சி அணுகுமுறையை இறுதியில் அவர்ஏற்றுக் கொண்டார்,

அவரின் கூற்றுப்படி, இந்தியாவில் காணப்படுகின்ற பன்முகத்தன்மையையும் பல இன சமூகத்தையும் கருதிப் பார்க்கும்போது, மக்களாட்சி இந்தியாவிற்கு மிகவும் பொருத்தமான ஆட்சி முறையாகும்.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் ஆட்சியில் பங்கேற்கவும், அவர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்தவும் இது ஒரு அடித்தளத்தை வழங்கியதாக அவர் நம்பினார்.

அதேபோல், தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள், உண்மையான மக்களாட்சிக்கு எதிரானது என்று அவர் கருதிய சமூக சமத்துவமின்மையையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடுவதில் வேரூன்றிய தி.மு.க.வின் அரசியல் சித்தாந்தத்தை வலுவாக நிலைநிறுத்தினார், அவர், மக்களாட்சியின் வாயிலாக சமூக நீதியை எய்துவதற்கு கடுமையாகப் பாடுபட்டார்.

முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், திராவிட சித்தாந்தத்தையும், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அடிச்சுவட்டையும் பின்பற்றி, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வரையறைக் குட்பட்டு, மக்களாட்சி வழியில் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து, சமூக நீதியை எய்துதல், சமூகத்தின் விளிம்புநிலை மக்களை மேம்படுத்துதல், ஏற்றத்தாழ்வுகளை ஒழித்தல், பெண்களுக்கு அதிகாரமளித்தல், 'அனைவருக்கும் அனைத்தும்' ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட 'திராவிட மாடல்' அரசைத் திறம்பட வழிநடத்தி வருகிறார்.

சுதந்திரப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஈந்த நமது ஆயிரக்கணக்கான மூத்த சகோதர, சகோதரிகளின் உயிர்த் தியாகங்களை ஒவ்வொருவரும் உணர வேண்டும். எனவே, மக்களாட்சி அரசுகளின் உண்மையான கருத்தியல் கோட்பாடுகளைத் திறம்படப் போற்றி, வலுப்படுத்தி, அவற்றை நமது இளைய மற்றும் எதிர்கால தலைமுறையினருக்குக் கடத்துவது ஒவ்வொரு இந்தியரின், குறிப்பாக நமது தலைவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் முழுப் பொறுப்பாகும்.

மாபெரும் இவ்விழாவிற்கு என்னைத் தனிப்பட்ட முறையில் அழைத்த மைக்காக தில்லி சட்டமன்ற அவைத்தலைவர் அவர்களுக்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் கீழச்சேரி தனியார் திருமண மண்டபத்தில் கீழச்சேரி மப்பேடு ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடத்திலிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் எடுத்துரைத்தார். மேலும் முகாமில் பங்கேற்ற பொதுமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் ரஜினிகாந்த், ஒன்றிய கழகச் செயலாளர் மோ. ரமேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள் உளுந்தை ஆர். கோபால், நீலாவதி ராஜேந்திரன், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு

தென்காசி மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு பல்வேறு வசதிகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

தென்காசி, ஆக.26 - தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது:-

மருத்துவத் துறையின் சார்பில் பல்வேறு கட்டமைப்புகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு வருகிறது.இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பல்வேறு வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது. இன்று 1கோடியே 14 லட்சம் ரூபாய் செலவில் சிறார் திறன் மேம்பாட்டு மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் இந்த மாவட்டத்தில் உள்ள 58 குழந்தைகள் பயன் பெற்று வருகின்றனர். முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் முதன்முறையாக விழுதுகள் என்ற அமைப்பை தொடங்கி வைத்துள்ளார்கள். பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்தி மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறிப்பாக பேச்சுத் திறன், நடக்கும் சக்தி,திறன் மேம்பாட்டு பயிற்சிகளை தொடர்ந்து வழங்கி வருகிறார்கள்.தென்காசி மருத்துவமனை இத்தகைய குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தி வருகிறது.உணர் திறன் பூங்கா, விளையாட்டுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் 18 படுக்கைகள் கொண்ட கட்டண வார்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மத்திய தரவருவாய் பிரிவினரும், உயர்தர வருவாய் பிரிவினரும் அரசு மருத்துவமனையை பயன்படுத்திக் கொள்வதற்கு வசதியாக இது போன்ற கட்டண வார்டுகள் திறந்து வைக்கப்பட்டு வருகிறது.இது போன்ற வாடுகள் சென்னை ராஜீவ்காந்தி மருத்துவ மனையில் மட்டுமே இருந்தது.தற்போது கோவை, மதுரை, சேலம், பெரம்பலூர், ராணிப்பேட்டை உள்பட 5 இடங்களில் இல்லை. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.இரண்டு, மூன்று கிடைத்தாலும் அதில் தென்காசி கண்டிப்பாக இடம் பெறும் என்றார்.

இவ்வாறு அமைச்சர் மா.சுபிரமணியன் தெரிவித்தார்.

அப்போது மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ. தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,

பொது சுகாதாரத்துறை இயக்குனர் சோமசுந்தரம், தென்காசி மருத்துவப் பணி இணை இயக்குனர் பிரேமலதா, மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின், மாவட்ட சுகாதார அலுவலர் கோவிந்தன்,உள்பட மருத்துவர்கள் மருத்துவ பணியாளர்கள் உடன் இருந்தனர்.

செய்யப்பட்டுள்ளது.

சங்கரன்கோவில் தொகுதியை சேர்ந்த மரம்,சாயாமலை, திருவேட்டநல்லூர், செந்தட்டியாபுரம்,கடையநல்லூரில் மேலக்கடையநல்லூர்,அச்சன்புதூர், சுந்தரேசபுரம் தென்காசி தொகுதியில் சிவகுருநாதபுரம், ஊத்துமலை, வாசுதேவநல்லூர் தொகுதியில் சிவகிரி, தலைவன் கோட்டை, துரைச்சாமிபுரம், விஸ்வநாத பேரி, ஆலங்குளம் தொகுதியில் கடையம் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்ட 18 கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு வருகிறது. திருவேங்கடபுரம், ஆய்க்குடி, வடகரை கீழ்பாடாகை,அச்சன்புதூர், வாசுதேவநல்லூர் ஆகிய 5 இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.வடகரையில் திடீர் ஆய்வு மேற்கொண்டேன்.5 மருத்துவர்களுடன் அந்த மருத்துவமனை மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. அங்கு இருதயநோய் சம்பந்தமாக 31 பேர் வந்து பயன்பெற்றுள்ளனர்.அதில் நான் ஒருவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன்.சிகிச்சை குறித்து மகிழ்ச்சியுடன் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை சொல்லிக் கூறுகிறேன் என்று கூறினார்.

கொரோனா காலத்திற்குப் பிறகு அதிகரித்து வரும் இருதய நோய்களுக்கு நகர்ப்புறங்களை செல்ல வேண்டும் என்ற நிலை மாறி கிராமப்புறங்களில் மருத்துவ வசதி வழங்கி வரும் துணை சுகாதார நிலையங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் என மொத்தம் 10 ஆயிரத்து 999 சுகாதார நிலையங்களில் லோடிங் டோஸ் என்ற மருந்துகள் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது.இருதய பாதிப்படையில் இருக்கும் பொழுது அடுத்த மூன்று மணி நேரங்கள் கோல்டன் ஹவர்ஸ் என்று அழைக்கப்படுகிறது. இந்த சமயத்தில் லோடிங் டோஸ் கிடைக்காத காரணத்தால் மரணம் ஏற்பட்டு வந்தது. இதயம் காப்போம் திட்டம் துவங்கப்பட்ட பிறகு 19, 546 நபர்களின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

தி.மு.க.அரசு பொறுப்பேற்கும் வரை நாய்,பாம்பு கடிக்கான மருந்து வட்டாரம் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே தரப்பட்டது. ஆனால் நாய் மற்றும் பாம்பு கடி அதிகமாக கிராம பகுதிகளில் தான் இருந்தது.முதல்வர் அவர்கள் வழிகாட்டுதலில் கூட மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் 2,686 ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங் களில் பாம்பு கடி, நாய் கடிக்கான மருந்து இருப்பு வைக்கப்பட்டது.இந்தியாவில் தமிழ்நாடு தவிர்த்து வேறு எந்த மாநிலத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்பு கடிக்கும் நாய் கடிக்கும் மருந்து இல்லை. மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒன்றிய அரசின் பிரதிநிதிகள் யாராவது வந்தால் அவர்களிடம் கேள்வி கேட்கலாம். முதலமைச்சர் அவர்களும் நானும் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறோம்.15 முறை டெல்லி சென்று தொடர் கோரிக்கை வைத்து வருகிறோம். கலைஞர் அவர்கள் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவமனை என்ற திட்டத்தை கொண்டு வந்தார்கள்.ஒன்றிய அரசும் அதனை ஏற்றுக் கொண்டது. 5 மாவட்டங்களில் தற்போது மருத்துவக் கல்லூரிகள் இல்லை.தென்காசி, மயிலாடுதுறை, பெரம்பலூர், ராணிப்பேட்டை உள்பட 5 இடங்களில் இல்லை. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.இரண்டு, மூன்று கிடைத்தாலும் அதில் தென்காசி கண்டிப்பாக இடம் பெறும் என்றார்.

இவ்வாறு அமைச்சர் மா.சுபிரமணியன் தெரிவித்தார்.

அப்போது மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ. தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,

பொது சுகாதாரத்துறை இயக்குனர் சோமசுந்தரம், தென்காசி மருத்துவப் பணி இணை இயக்குனர் பிரேமலதா, மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின், மாவட்ட சுகாதார அலுவலர் கோவிந்தன்,உள்பட மருத்துவர்கள் மருத்துவ பணியாளர்கள் உடன் இருந்தனர்.

தென்காசி மாவட்டம் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் சேர்ந்தமரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ரூபாய் 10.91 கோடி மதிப்பில் 18 புதிய கட்டிடங்களையும்,ரூபாய் 6 கோடி மதிப்பில் 5 புதிய கட்டிடம் ஆக மொத்தம் ரூபாய் 16.91 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினர். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், சதன்திருமலைகுமார் எம்.எல்.ஏ. உள்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.